06.11.2025

அ.வ எண்.59/2012,

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025

பி.வா.சா.1–அய்யாத்துரை , வயது–81/2025, த/பெ.வினைதீர்த்தான்

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு சொத்தின் புல எண்.175/204. இந்த வழக்கு சொத்து தொடர்பாக வாதி தர்மத்திற்கும், டாக்டர் நடராஜன் என்வருக்கும் இடையே திருத்துறைப்பூண்டி நீதிமன்றத்தில் அ.வ.எண்.412/2019 நடைபெற்றது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி வழக்கு நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அ.வ.எண். 281/2002–ஆக வழக்கு நடைபெற்றது தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பில் நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு எண்.43/2007 குறித்து தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி வழக்கில் டாக்டர். நடராஜனுக்கு வழக்கு சொத்து சொந்தம் கிடையாது என்றும், அவர் இடத்தை காலி செய்து ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பானது என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்கண்ட வழக்கில் தீர்ப்பாணையின்படி இந்நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண். 18/2010 மூலம் சொத்து வசப்படுத்தப்பட்ட விவரம் எனக்குத் தெரியும். நீதிமன்ற உத்தரவின்படி சுவாதீனம் எடுக்க வரும்போதுதான் எனக்குத் தெரியும்.

மேற்கண்ட புல எண் சொத்தில் கதவு எண்.24/4, 24/5 உள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள RCC மாடிக் கட்டடம் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்ட வசக்கட்டளையில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வ.ச.6 ஆவணமான வசக்கட்டளையில் நான் மூன்றாவது நபராக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுவாதீனம் எடுக்கப்பட்டதில் கதவு எண்.24/4, 24/5 என்ற இரண்டு கதவு இலக்கங்கள் உள்ள கட்டடங்கள் வசப்படுத்தியதாக காணப்பட்டுள்ளது என்றால் சரி.

என்னிடம் காட்டப்படும் வா.த.சா.1 ஆவணம் தான் நானும், வா.சா.1–ம் ஏற்படுத்திக் கொடுத்த வாடகைப்பத்திரம் என்றால் சரிதான். இந்த பத்திரம் 11 மாதக் காலத்திற்கு காணப்பட்டுள்ளது. நான் 11 மாதத்திற்கு வாடகை கொடுத்தேனா என்றால், கொஞ்ச

காலம் கொடுத்தேன். எவ்வளவு காலங்கள் வாடகைக் கொடுத்தேன் என்றால், சுமார் 4, 5 மாதங்கள் வாடகை கொடுத்தேன். வா.சா.1 ஆவணமானது எனது ஏற்பாட்டில்தான் எழுதப்பட்டது என்றால் சரி. வா.சா.1 ஆவணத்தில் கட்டடத்தின் மதிப்பை கொடுக்க வேண்டும் என்று எழுதப்படவில்லை என்றால் சரி.

5 மாதத்திற்கு பிறகு ஏன் வாடகை கொடுக்கவில்லை என்றால், 5 மாதத்திற்கு பின்னர் தான் முந்தைய வழக்கு பற்றி விசாரித்தேன். அதனால்தான் வாடகை கொடுக்கவில்லை. 09.08.2011–ல் எனது தரப்பு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரி. அதற்கு வாதி தரப்பில் 03.09.2011–ல் பதில் அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரி. மேற்படி பதில் அறிக்கையில் முந்தைய வழக்கு விவரங்களை சொல்லியுள்ளார் என்றால் சரி. அதில் டாக்டர். நடராஜனுக்கும், வாதிக்கும் நடந்த வழக்கு விவரங்களை சொல்லியுள்ளார் என்றால் சரி.

நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் ஏற்பட்ட மேல் முறையீட்டு தீர்ப்பில் நடராஜனுக்கு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்ததில் உரிமை இல்லை என்றும், அவரால் ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரம் செல்லத்தக்கது என்றும் தீர்ப்பானது என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. நடராஜன் பேரில் பட்டா இருந்தது. அதன் அடிப்படையில்தான் நான் சொத்தை வாங்கினேன்.

நடராஜன் பெயரில் பதிவு செய்யப்பட்ட மூலப்பத்திரம் இருந்ததா என்றால், இல்லை. அவர் பெயரில் பட்டா இருந்தது. நீதிமன்ற வசக்கட்டளையில் கையொப்பம் செய்வதற்கு முன்பும், வாடகைப் பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்பே நான் கிரயம் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனது மனைவி பெயரில் நான் கிரயம் வாங்கியதாக சொல்வது மோசடியாக ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணமாகும். அதில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் நீதிமன்ற வசக்கட்டளையில் என்னை வற்புறுத்தி கையொப்பம் பெற்றுவிட்டார்கள் என்றோ, வாடகைப் பத்திரத்தில் மோசடியாக எனது கையொப்பம் பெற்றுவிட்டார்கள் என்றோ சொல்லவில்லை என்றால் சரி.

நீதிமன்ற வசக்கட்டளையில் நான் கையொப்பம் செய்து கொடுத்த பிறகு,

வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றும், ஆகவே தற்போது வாதியின் உரிமையை மறுப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கட்டடத்தின் மதிப்பு தொகையை வாதி தருவதாக ஒப்புக் கொண்டார் என்று நான் கூறியுள்ள நிலையில் மேற்படி தொகையை கோரி நான் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. கட்டடத்திற்கு எவ்வளவு தொகை நிர்ணயம் செய்தோம் என்றால், ரூபாய் 16 இலட்சம். மேற்படி விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரி. ஆகவே, கட்டடத்திற்கான தொகையை வாதி தருவதாக ஒப்புக் கொண்டார் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் எல்.ஆர்.செல்வம் தாக்கல் செய்த வழக்கு சம்பந்தமாக நான் இதே நீதிமன்றத்தில் அவருக்காக சாட்சி சொல்லியுள்ளேனா என்றால், எனக்கு நினைவில்லை. மேற்படி வழக்கில் நான் அவருக்காக சாட்சி சொல்லி இந்த வழக்கில் சொல்லப்பட்ட வசக்கட்டளை விவரங்களை உண்மை என்று ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால், எனக்கு நினைவில்லை. இதே நீதிமன்றத்தில் கதவு எண்.24/4, 24/5 தொடர்பாக அ.வ.எண்.10/2015 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரி. மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தான் மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரி.

நான் தாவா சொத்திற்கு வாடகைதாரர் தான், உரிமையாளர் என்று சொல்வது சரியல்ல. எனது கூடுதல் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**
**(Sd/-……..S. Dineshkumar, 06.11.2025)**
**Vedaranyam(F.A.C.)**